# Gospel Truth

# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 26 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 26


## இரண்டு இராஜ்யங்கள்- பூமிக்குரியது-பரலோகத்திற்குரியது

நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் – பிலி 3 : 20

பல சந்ததிகளிலும், பற்பல தேசத்திலும் வாழ்ந்த பல விசுவாச வீரர்களைக் குறித்து எபிரெயர் 11 ஆம் அதிகாரத்தில் காணமுடிகிறது.அவர்களுடைய மரணம் ஒவ்வொருவிதமாய் இருந்தாலும், அவர்களுடைய விசுவாச வாழ்வு ஒன்றாக இருந்தது. அவர்களுடைய கண்கள் மகிமையால் நிரப்பப்பட்டு, ஆவிக்குரிய வாழ்க்கை வாழும்படியாய் பூமியிலே அந்நியரும் பரதேசிகளு மானார்கள். பரலோகத்தில் அவர்களுடைய குடியிருப்புகளோ இந்த உலகப்பிரகாரமான வாழ்வோடு ஒப்பிடப்பட முடியாத அளவுக்கு உயர்ந்தது.

தேவபிள்ளைகளாகிய நாம் இருவிதமான ராஜ்யங்களைக் குறித்து முதலாவது புரிந்துகொள்ளக் கடவோம். ஒரு ராஜ்யம் இந்த பூமிக்குரியது. மற்றொன்றோ நாம் இந்த பூமிக்குரிய ராஜ்யத்திலே நுழைந்து விட்டோம். அதுபோல ஒருவன் மறுபடி பிறவா விட்டால் தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யத்திலே பிரவேசிக்க முடியாது (யோவான் 3 : 3). இரண்டாவதாக சொல்லப் பட்டுள்ள ஆவிக்குரிய ராஜ்யத்தின் ஆளுகை தேவனுடைய கரங்களிலி ருக்கிறது. இயேசு கூறுகிறார் : என் ராஜ்யம் இவ்வுலகத்திற் குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற் குரியதானால் ...என் ஊழியக்காரர் போராடி யிருப்பார்களே (யோவான் 18 : 36). தேவனு டைய ராஜ்யம் தேவபிள்ளைகளாகிய உங்க ளுக்குள் இருக்கிறதே(லூக் 17 : 20-21). தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமு மாயிருக்கிறது (ரோமர் 14 : 17).

ஒரு நாட்டின் குடிமக்கள் எனப்படுவோர் பிறப்பால் எந்த நாட்டை சார்ந்து வாழ்கிறார்களோ அவர்களே அந்த நாட்டின் கலாச்சாரம், ஒழுங்கின்படி பிள்ளைகள் பெரியவர்களால் வளர்க் கப்பட்டு அந்தந்த நாட்டின் குடிமக்களாக தங்களை பிரகடனப்படுத்திக் கொள்கிறார்கள்.

குடிமகன் என்பது ஒருநாட்டில் வசிக்கும் ஒருவருக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்படும் அங்கீகாரமும், அடையாளமுமாகும் ஆகவே ஜனங்கள் தேசப்பற்றும், தாய்நாட்டுப்பற்றும் உடையவர்களாக இருக்கிறார்கள். இரத்தஞ்சிந்துதலுக்கும் போருக்கும் கூட துணிந்து தாய்நாட்டுப் பற்றுடன் ஒருமைப்பாட்டிற்காக உறுதிமொழி கொள்கிறார்கள். தேசப்பற்று என்பது சிறந்தது ஆயினும் ஆவிக்குரிய காரியத்தினின்று அது வேறுபட்டது. ஏனெனில் ஒரு நாட்டைச் சேர்ந்த தேசப்பற்றுள்ள குடிமகன் மற்ற நாட்டுடன் ஒப்பிடும்போது அதனோடு பற்று கொண்டிருப்பதில்லை. அப்படியானால் எந்த அரசாங்க ராஜ்யத்தையோ அல்லது தேசத்தையோ சார்ந்த ஜனங்கள் தேவனுடைய கண்களுக்கு சிறப்பானவர்கள்? எந்த ஒரு நாட்டிற்காக கிறிஸ்து ஒருமைப்பாட்டையும் உறுதிமொழியையும் ஏற்க கூடும்? ஏனெனில் கிறிஸ்துவுக்குள் யூதனென்றும் கிரேக்கனென் றுமில்லை (கலா 3 : 28) . அனைத்து தேச ஜனங்களும் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் இரட்சிப்பினிமித்தம் ஒன்றாயிருக்கிறார்கள்.

தேவனுடைய பரிசுத்த ஜனங்களாய், இந்த பூமிக்குரிய கூடாரமாகிய உலகத்தின் நாடுகளில் வசித்து, தேவனுடைய அன்பையும், ஊழியத்தையும் சுவிசேஷத் தையும் பறைசாற்றுபவர்கள் பூமியிலே அந்நியரும், பரதேசிகளுமாகவே பார்க்கப் படுகிறார்கள். இந்த உலகம் எதிர்பார்ப்பதைவிட பலமடங்கு அதிகமான எதிர்ப்பார்புகள் பரலோகத்தின் தேவனுக்கு உண்டு.



**“ இந்த பூமிக்குரிய ராஜ்யத்தில் குடிமக்களாய் நாம் அங்கிகரிக்கப்பட்டு, இங்கே வாழுகின்ற அதே சமயம் நாம் ஆவிக்குரிய ராஜ்யத்தில் இளைப்பாறுகிற அடையாளமும் சமாதானமுமாய் வாழவும் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைக்கும் அங்கீகாரம் உண்டு”**


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | ஒருநோக்கு செய்தி | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா? |
| --- | --- | --- | --- | --- |
| | வேதாகம கருத்தில் ஒத்துப்போகாமை | வேதாகம கருத்தில் ஒத்துப்போகாமை | நேர்மையான ஆட்சேபணை | ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை |
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 :15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

ஆகவே பூமிக்கும் ஆவிக்குமான ராஜ்யங்களிலே குடிமக்களாக இருக்கும் நமக்கு ஒரு ராஜ்யமே சிறந்ததும், கனமுள்ளதுமாகும். இவ்வுலகத்தின் ராஜ்யத்தில் வாழும் தேவபிள்ளைகளும் தங்கள் தேசத்தின் சட்டதிட்டங்களுக்கு கீழ்படிந்து ஒழுக்கமும் கடின உழைப்பும், மரியாதையும் உள்ளவர்களாக நடக்கவும், அதேசமயம் தேவனுக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய வாழ்வின் விசுவாசத்தையும் நல்லொழுக்கத்தையும் அர்ப்பணிப்பையும், பரிசுத்த வாழ்வையும் காத்துக் கொள்ள வேண்டும் (யோவான் 17 : 14 - 16) ல் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கூறுகையில் நான் உலகத்தானல்லாதது போல நீங்களும் உலகத்தாரல்ல என்கிறார்.

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் உலகத்தின் ராஜ்யத்திலிருந்து வேறுபிரிக்கப்பட்டவர்களாய் வேறு நோக்கமும், எண்ணமும் உடையவர்கள் பூமிக்குரிய கூடாரமாகிய மாம்சீக வாழ்வுக்கென்று கொடுக்கப்பட்ட இந்த பூமியின் ஆசை, இச்சைகளை வெறுத்து, முழுமனதோடும், தேவபக்தியோடும், அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வில் மனத்தாழ்மையும், அன்பையும் ஆவிக்குரிய ராஜ்யம் கட்டப்படும்படியாய் தைரியமாய் சுத்தமனசாட்சியோடே நடந்து கொள்வோமாக! வேதத்தின் அடிப்படையிலே மாம்சீகமான பாதுகாப்பு ஒப்புடையதாக இல்லாவிட்டாலும், ஆவிக்குரிய ராஜ்யத்திலே ஆத்துமாவின் இரட்சிப்பே விலையேறப்பெற்றது.

உலகமெங்குமுள்ள பரிசுத்தவான்கள் ஒவ்வொருவரும் வேறு வேறு நாட்டையும், பாரம்பரியத்தையும், மொழியையும் சேர்ந்தவர்களாயினும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாய் இருக்கிறார்கள்.

**இந்த பூமிக்குரிய ராஜ்யத்தில் குடிமக்களாய் நாம் அங்கிகரிக்கப்பட்டு இங்கே வாழுகின்ற அதே சமயம் நாம் ஆவிக்குரிய ராஜ்யத்தில் இளைப்பாறுகிற அடையாளமும் சமாதானமுமாய் வாழ்வும் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைக்கும் அங்கீகாரம் உண்டு.**

ஆகவே பூமிக்குரிய ராஜ்யத்தினால் வேறுபடுத்தப்பட்டாலும், ஆவிக்குரிய கூடாரத்தில் எல்லாரும் ஒன்றே, தேவனுடைய பரிசுத்தவான்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்து கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல், தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளமாட்டான் (2 தீமோ 2 : 4) என்கிறார். உலக இச்சைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதில் தேவ பிள்ளைகள் எச்சரிக்கையாய் நடந்து கொள்ள வேண்டும் அரசியல், தேசபற்று, பாதுகாப்பு என பல காரியங்கள் ஒருவருடைய வாழ்வை துரிதமாய் மாற்றி தேவனுடனான நித்திய வாழ்வின் மகிமையை அழித்துப்போடும்.

நாம் வாழும் ஒவ்வொரு நாட்டிலும் இந்த பூமிக்குரிய ராஜ்யத்திலும் நமக்கான நன்மைகளை அவர் தர வல்லவர். அந்தந்த நாட்டின் குடிமக்களுக்கு அரசாங்கம் அளிக்கும் சலுகைகளும் தேவபிள்ளைகள் கூட ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அதேசமயம் தேவனுடைய வசனத்தின்படி நடந்து கொண்டும் அவருடைய கட்டளையைக் காத்துக் கொள்வதிலும் கவனமாய் இருக்க கடவோம்.

இந்த பூமிக்குரிய ராஜ்யத்தில் குடிமக்களாய் நாம் அங்கிகரிக்கப்பட்டு இங்கே வாழுகின்ற அதே சமயம் நாம் ஆவிக்குரிய ராஜ்யத்தில் இளைப்பாறுகிற அடையாளமும் சமாதானமுமாய் வாழ்வும் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைக்கும் அங்கீகாரம் உண்டு.

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க www.thegospeltruth.org என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.*

*படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*

**டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவை களோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம் – 1கொரி 2 : 13

இந்த இதழில் வேதத்தின் அடிப்படையில் எதிர்ப்புகளற்ற வன்முறையின்மையைக் குறித்து காணலாம். இந்த இரண்டு கருத்துக்களுக்கும் வேற்றுமைகள் உண்டு. வன்முறையின்மை என்பது போர் மற்றும் எதிர்க்கும் பழக்கம் – இது புதிய ஏற்பாட்டு போதனைகளில் மாறுபட்டது. அதேசமயம் மத அடிப்படையிலான போராயுதங்களை ஏந்துவதைக் குறித்த எதிர்ப்பும் இதில் அடங்கும்.

வன்முறையின்மை என்பது பழைய ஏற்பாட்டைக் காட்டிலும் புதிய ஏற்பாட்டின் போதனைகளில் முக்கியமானது. கிறிஸ்துவின் கீழ் அநேக காரியங்கள் முற்றிலுமாக மாற்றப்பட்டிருப்பினும், இந்த கோட்பாட்டின் நம்பகத்தன்மை வலுவிலந்து போகவில்லை. வன்முறையின்மை என்பது இருதயத்தைச் சோர்வடையச் செய்யும் பழக்கமோ கருத்தோ இல்லை.சிலர் எதிர்ப்புகள் வரும்போது தங்களை பாதுகாத்துக் கொள்பவர்களே உண்மையானவர்கள் என்று பரிகாசம் செய்கிறார்கள்.

**கிறிஸ்தவர்களாகிய நாம் இரண்டு விதமான ராஜ்யங்களின் குடிமக்கள் என்பதையும், வன்முறையின்மை என்பதை கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியும் தீர்மானிப் போமானால், நம்மை யாரும் திசைதிருப்பமுடியாது.**

கலகம் பண்ணுவதோ அல்லது துப்பாக்கி போன்ற ஆயுதங்களோடு போராடுவதைக் காட்டிலும் மன்னிப்பதற்கும் அன்புகாட்டுவதற்குமே அதிக வலிமை தேவை என நான் கருதுகின்றேன். இந்த கொள்கைபடி போர் தடைகளை தகர்த்து, எதிரிகளின் மன நிலைமையை முற்றிலும் மாற்றி, சிறுகோடரியால் சாதிக்கமுடியாததை, நேர்மறையான எண்ணங்களின் வல்லமையினாலே சாதிக்கமுடியும். சிலுவையின் வல்லமையில் மனத்தாழ்மையை காணலாம்.ஆனால் இவ்வுலகிற்கு அது கோழைத்தனமாக தோன்றலாம். ஆனால் அன்பைத் தழுவி செய்கிற காரியங்களில் நல்லொழுக்கமும் நீதியும் வெளிப்படும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் இருவேறு ராஜ்யங்களின் குடிமக்கள் எனவும், வன்முறையின்மை என்பதை கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியும் தீர்மானித்தால் நம்மை திசைதிருப்ப இயலாது.பழிவாங்குதல் கர்த்தருக்குரியது.இந்த பூமிக்குரிய அரசாளும் ராஜாக்களை தேவஜனங்களுக்கும், புறஜாதியாருக்கும் நீதியாய் உத்தரவு செய்யும்படியாய் அவர் நியாயந்தீர்ப்பார்.நாம் அங்கம் வகிக்கும் அரசாங்கத்திற்கு மதிப்பும், கண்ணியமும் காக்கப்பட வேண்டும்.
அதேசமயம் அதன் சுதந்தரத்தை, வேதசத்தியங்களை நழுவிச்செல்லும் வகையில் பயன்படுத்த கூடாது.விசுவாசம் எப்போதும் நம்மைப் படைத்த தேவன்மேலே இருக்க கடவது.கிறிஸ்தவர்களாகிய நாம் பரலோகத்தின் குடிமக்களாய் இருப்பதினால், உலகத்தின்பால் கொண்ட பற்றுதலோ, பாசங்களோ தேவனோடு உள்ள உறவை பாதிக்ககூடாது.ஏனெனில் இந்த உலகம் தற்காலிகமானது.ஆகவே நித்திய நித்தியமாக வாழப்போகிற பரமராஜ்யத்திற்கு நம்மை தயார்படுத்தவே அதிகநேரம் செலவிட வேண்டும்.

நடைமுறை வாழ்வில் எந்த செயலை செய்தாலும் இயேசு எப்படி வாழ்ந்தார் என்று நம்மைநாமே கேள்வி கேட்டு அதற்கான பதிலை தேவன் நமக்கு அவருடைய வாழ்வில் உணர்த்தியவாறு மெய்யாய் நடந்துகொள்ள வேண்டும்.இயேசுகிறிஸ்து அரசியல் சுதந்தரத்திற்காக போர்முயற்சியோ போராட்டங்களோ செய்யவில்லை.நம்மை கொடுமைப்படுத்துகிறவர்களை கண்டு ரோம்நகரில் ஊர்வலம் செல்லவோ அல்லது தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவோ சொல்லவில்லை.இயேசுகிறிஸ்து தம்மை பகைத்தவர்களைக் கூட தேடிச்சென்று அன்புகாட்டினார்.கிறிஸ்துவின் உபதேசம் தனிப்பட்ட எந்த மனிதனுக்கும் வன்முறையை கற்றுத்தராது.ஆகவே சுவிசேஷத்தை ஜாக்கிரதையாய் பிரசங்கிப்போம்.
ஜான் டிராத், தன்னுடைய போருக்கு எதிரான தேர்ந்தெடுத்தல் புத்தகத்தின் இறுதியில் கிறிஸ்தவர்களின் வன்முறையின்மை எனும் கொள்கை நீதிநெறி கோட்பாடாகும் என்று சொல்கிறார்.அது சிலுவையண்டையில் நம்மை வழிநடத்தி செல்லும் உறுதியான ஒரு முடிவாகும்.

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

# வேதபாட வழிகாட்டி

## வேதாகம கருத்தில் ஒத்துப்போகாமை



**வேத வாசிப்பு :** கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல் என்று உரைக்கப்பட்டதை கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கனனத்தையும் திருப்பிக்கொடு, ஒருவன் உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு **உன்** அங்கியையும் விட்டுவிடு (மத் 5 : 38 – 41).

**செய்திச் சுருக்கம் :** இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை சாட்சியும், போதனையும், அன்பையும், எதிர்ப்புகளற்ற அதாவது வன்முறையின்மையையும் காட்டுகிறது.இயேசுகிறிஸ்து தம் சீஷர்களுக்கு போதித்து சொன்னது என்னவெனில் அநீதியையும், பிசாசின் கிரியைகளையும் அன்பினாலும், மன்னிப்பினாலுமே மாற்றமுடியுமே தவிர வன்முறையினால் கூடாது.

**வரையறை :** கலகமில்லாத தன்மை –இந்த கோட்பாட்டின்படி வன்முறையை எதிர்ப்பதற்கு போராயுதங்களையோ கொடுமையான முறைகளையோ கையாளக்கூடாது. வன்முறையின்மை – மத அடிப்படையிலான தார்மீக பொறுப்புகளில் ஆயுதம் சார்ந்த வன்முறைகளில் ஈடுபடக்கூடாது.

### I. தீர்க்கதரிசனம்

A. எரேமியா 31 : 31 புது உடன்படிக்கை (எபி 8 : 13)

B. மீகா 4 : 2-3 அவர்கள் யுத்தத்தை கற்பதுமில்லை

### II. இருவேறு இராஜ்யங்கள்

A. பிலி 3 : 20 நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது

B. யோவான் 3 : 3 ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தை காணமாட்டான்

C. லூக் 17 : 20 –21 தேவனுடைய ராஜ்யம் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது (ரோமர் 14 : 17)

D. யோவான் 18 : 36 என் ராஜ்யம் (இயேசு) இவ்வுலகத்திற்குரியது அல்ல.

E. யோவான் 17 : 14 – 16 இயேசுவினுடைய சீஷர்களும் உலகத்தாரல்ல

F. எபி 11 : 13 –16 பூமியின் மேல் அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டவர்கள்

G. எபே 2 : 19 – 20 பரிசுத்தவான்களோடே தேவனுடைய வீட்டாருமாயிருந்தார்கள்.

### III. கிறிஸ்துவின் போதனை - அன்பு

A. மத் 22 : 36 – 40 அன்பே பிரதான கட்டளை (ரோமர் 13 : 9 – 10)

B. மத் 5 : 38 – 41 தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம் (லூக் 6 : 27 – 29)

C. மத் 5 : 43 – 48 உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்

### IV. பரிசுத்தவான்களின் போர் ஆயுதங்கள்

A. மத் 26 : 51 – 52 பட்டயத்தை அதின் உறையிலே போடு

B. 2 கொரி 10 : 3 – 4 எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல்

C. எபேசி 6 : 11 – 12 மாம்சத்தோடு அல்ல, ஆவியோடு தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள்

### V. ராஜாங்கத்தின் நிலைப்பாடு

A. தானி 2 : 21 அவர் ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர் (சங் 75 : 7)

B. தானி 4 : 17 உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்கிறார்

C. 1 பேதுரு 2 : 13 – 14 தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினை உண்டாகும்படி அனுப்பப்பட்ட அதிகாரிகள்

D. ரோமர் 13 : 1 – 4 உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவர்கள் ஆக்கினையை வருவித்துக்கொள்கிறார்கள் (எரேமியா 25 : 8 –9)

### VI. பரிசுத்தவான்களின் குணம்

A. 1 பேது 2 : 21 – 24 அவர் பாவஞ்செய்யவில்லை அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை

B. 1 பேது 3 : 9 தீமைக்கு தீமையை சரிக்கட்டாதிருங்கள்

C. 1 பேது 2 : 13 – 15 மேலான அதிகாரமுள்ள யாவருக்கும் கீழ்ப்படியுங்கள்

D. 1 தீமோ 2 : 1 – 3 நாம் எல்லா பக்தியோடும் ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்ககவும் ஜெபம் பண்ண வேண்டும்.

E. 2 தீமோ 2 : 3 – 4 பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ள மாட்டான்

F. ரோமர் 12 : 14 – 21 உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; சபியாதிருங்கள்

### முடிவு :

இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார் ( 1 பேதுரு 2 : 21)

# வேதாகம கருத்தில் ஒத்துப்போகாமை

## அன்பின் சட்டதிட்டத்திற்கான கிறிஸ்துவின் அழைப்பு

அன்பு எனும் பிரதானமான கட்டளையை கிறிஸ்து இயேசு நமக்கு வலியுறுத்தி காண்பித்திருக்கிறார். உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள். பதிலுக்கு பதில் செய்யாதிருங்கள். பழைய ஏற்பாட்டு நாட்களிலே யுத்தங்களும், இரத்தம் சிந்துதலும் வழக்கத்தில் இருந்தது.ஆனால் புதுஉடன்படிக்கையின் கிருபையின் காலத்திலே தேவன் இதை விரும்பவில்லை.



**“ இயேசுவின் மரணத்தருவாயிலும் இக்கட்டான வேளையிலும் கூட பேதுருவை வாளை உறையிலே போடும்படியாக சொன்னார்”**

### புது உடன்படிக்கை

யுத்தமும், கண்ணுக்கு கண் எனும் பழக்கமும் வரலாற்றிலே இஸ்ரவேல் ஜனங்களிடையே இருந்து வந்தது. இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்போழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன் (எரேமியா 31 : 31). மீகா தீர்க்கதரிசியும் கூட முன்னறிவித்து சொன்னது யாதெனில், அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதுமில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை (மீகா 4 : 2 – 3). இந்த தீர்க்கதரிசன மானது இயேசு கிறிஸ்துவின் நாட்களில் இரட்சிப்பின் திட்டத்தினால் நிறைவேறியது.

### அன்பு என்னும் நியதி

புதிய ஏற்பாட்டிலே, தேவபிள்ளைகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றும் படியாய் அவருடைய போதனைகளைக் கைக்கொள்ள அழைக்கப்பட்டிருகிறோம். பிரதானமாய் அவர் கூறியது என்ன வெனில், உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்புகூரவாயாக (மத் 22 : 36 – 40) .தேவபிள்ளைகளாகிய நாம் அன்பையும், இரக்கத்தையும் மற்றவர்களுக்கு காண்பிக்கவும் நமக்கு தீமைசெய்தவர்களை நேசிக்கவும் கடமைப்பட்டுள்ளோம். இஸ்ரவேல் ஜனங்கள் யுத்தபுருஷர்களாய் இருந்தபோதும் கூட கிறிஸ்துவினுடைய வழிநடத்துதலானது அமைதியாகவும், ஒருவரோடும் எதிர்த்து நிற்காத தன்மையையுமே போதித்தார். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு (மத் 5 : 38 –39). இது நமக்கு மாத்திரமல்ல, கொடுங்கோல் ஆட்சி செய்த ரோமர்களுக்கு கீழ் வாழ்ந்த யூத ஜனங்களுக்கும், மேலும் மேசியா வந்து ரோமர்களுக்கு எதிராக யுத்தம் செய்யும் பலத்தை நமக்குத் தருவார் என எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் போது, தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். என்பதே மேசியாவாம் இயேசு கிறிஸ்துவின் போதனை.

### இயேசுவின் உதாரணம்

இயேசு தம்முடைய ஜனங்கள் யுத்தம் செய்வதையோ அல்லது சண்டை பண்ணுவதையோ விரும்பினாரா? இல்லை அவருடைய வார்த்தைகள் மிகவும் வல்லமையுடையதாக, மேன்மையானதாக இருந்தது. இயேசு கிறிஸ்து மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கும்படியாக காட்டிக்கொடுக்கப்பட்ட வேளையிலும் கூட பேதுருவை நோக்கி உன் வாளை உறையிலே போடு என்கிறார். (மத் 26 : 52). எவ்வளவு பாடுகளோ, பயங்கரமோ, சதி நாசமோ நேர்ந்த போதும் கூட அதைக் குறித்து அவர் தாம் வாழந்து காட்டி சென்றிருக்கிறார். அவரைப் பின்பற்றி வாழ்கிற நாமும் கூட அநீதி இளைக்காவிட்டாலும், பாடுகள் இன்னல்கள் நேரிட்டாலும் அன்பே பிரதானமாக கொண்டு ஒவ்வொருவரையும் நேசிக்கவும், எந்தமொழி இன, நாடு, மத பேதமின்றி நேசிகககவே அவர் வலியுறுத்துகிறார்.

தேவன் நம்மேல் வைத்த கடமை தீமைக்கு எதிர்த்து நிற்க வேண்டாம். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நித்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப் படுத்துகிறவர்களுககாகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள் (மத் 5 : 43 – 45).

### ஆவிக்குரிய யுத்தம்

பவுல் அப்போஸ்தலர் ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்து நாங்கள் மாம்சத்திலே நடக்கிறவர்களா யிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர் களல்ல. எங்களுடைய போராயு தங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது (2 கொரி 10 : 3 – 4). மாம்சத்திற்குரிய போர் மாத்திரமல்ல, ஆவிக்குரிய போரும் கூட அன்பினாலே வேறுபடுகிறது. பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள் (மத் 26 : 52). சுவிசேஷத்தின் சமாதானத்திற்கென்று அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவர்களாகிய நாம் தேவவார்த்தையை மறந்து போய்விடக்கூடாது. தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு, ஆவிக்குரிய போராட்டம் உண்டு.ஆனால் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல (எபே 6 : 11 –12).

### வரலாற்று சான்று

வரலாற்று சான்றுகளின் பிரகாரம் ஆதி திருச்சபை கிறிஸ்தவர்கள் இரத்தஞ்சிந்துதலையோ,



**ஆவிக்குரிய தேவபிள்ளைகளுக்கும் தேவன் ஏற்படுத்திய உலகப்பிரகாரமான காரியங்களுக்கு கீழ்ப்படிகிற உலகமனுஷர்களுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு**

போரையோ ஏற்கவில்லை ஆதுபோலவேதான் பின்நாட்களில் வந்த கிறிஸ்தவர்களும் போரை தவிர்க்கவே முயற்சித்தார்கள்.சேவைசெய்வதும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்து விசுவாசத்தோடு அன்பையே பிரதானமாய் எண்ணினார்கள். இரண்டாவது நூற்றாண்டின் மத்திய காலக்கட்டத்தில், ஜஸ்டின் மார்டியர் இவ்வாறாக எழுதுகிறார். நாம் நம்முடைய போரின் போராயுதங்களான, வாள்களை எல்லாம் கலப்பைகளாகவும், ஈட்டிகளை விவசாயப் பயன்பாட்டு கருவியாகவும் உபயோகிக்கும் படியாய் திசைதிருப்பப்படுகிறோம்.

## கிறிஸ்தவ அதிகாரப்பூர்வமான சமரசம்

சமரசத்திற்கு பின் கிறிஸ்தவர்களும் இராணுவத்தில் சேரத் தொடங்கின காலகட்டம் கி.பி 174 ம் ஆண்டுகளில் டெர்டுலியன் எழுதுகையில் சட்டத்தின்படி வழக்காடுகிற சமாதானத்தின் மகன் ஒரு போர் வீரனாக மனமாற்றப்பட்டால், உடனடியாக இராணுவப் பொறுப்பை கைவிட்டு, அதற்கான தண்டனையை ஏற்கவும் பொறுத்துக் கொள்ள வேண்டும். ரோமப் பேரரசுக்கொள்கை (312) படி, கிறிஸ்தவத்தின் ஒழுங்குமுறைச்சட்டம் ஏற்படுத்தப்பட்டது.

அதன்பின்புதான் மெல்ல மெல்ல கிறிஸ்தவர்களும் அகிம்சை வழியை கைவிட்டனர். ஏனெனில்அரசாங்க சட்ட திட்டங்களும் அப்படியாகின.380 ம் வருடங்களில் பேரரசர் தியோடியஸ் மற்றும் கிராடியேனஸ் கிறிஸ்தவத்தை ஒரு மாநிலத்தின் அதிகாரப் பூர்வமான மதமாக அறிவித்தது மாத்திரமல்ல, இராணுவத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் கிறிஸ்தவர்களாய் இருக்க வேண்டும் என்றனர்.

## லௌகீக காரியத்திற்கும் ஆவிக்குரிய காரியத்திற்கும் உள்ள வித்தியாசம்

பல கிறிஸ்தவர்கள் இன்றும் இதே விஷயத்தை சமரசம் செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பகைவர்களை நேசிக்க வேண்டும் எனும் கொள்கையில் வாழ்கின்றவர்கள் பழைய வரலாற்றையோ வேறெந்த காரியங்களையோ நோக்காமல், இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை மாத்திரமே கருத்தில் கொள்வோம். தற்காலிகமானது ஒரு ராஜ்யம். ஆவிக்குரியது மற்றொரு ராஜ்யம். முதலில் அடிப்படையாக இந்த ராஜ்யங்களைக் குறித்து அறிந்து வைத்துக்கொள்ள வேண்டும். என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல (யோவான் 18 : 36). நான் உலகத்தானல்லாதது போல, அவர்களும் உலகத்தாரல்ல (யோவான் 17 : 14-16). தேவராஜ்யத்தில் பங்குகொள்ளும் தேவதாசர்களும், தேவனுடைய பரிசுத்தவான்களும் தேசத்தின் பெயராலே போர் தொடுத்து, யுத்தம் பண்ணுவது ஆவிக்குரிய தேவனுடைய ராஜ்யத்தின் குடிமக்களாவதற்கான தகுதிகளிலே முரண்பட்ட ஒன்றாக இருக்கிறது. உலகப்பிரகாரமாக கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்கும் ஆவிக்குரிய தேவனுடைய

பிள்ளைகளின் வாழ்விற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு.

## தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள்

தானியேல் தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலே,அவர் ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர் என்று சொல்லப்பட்டுள்ளது (2 : 21). உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார் (4: 17) .மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி கீழ்ப்படியுங்கள் (1பேது 2 : 13-14). தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக் காரனாயிருக்கிறான் (ரோமர் 13 : 1-4).

## கிறிஸ்தவர்களின் அழைப்பு

இந்த பூமியிலே சபை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம், சுவிசேஷம் உலகமெங்கும் அறிவிக்கப்பட வேண்டும். தீமைசெய்கிற வர்களும் தண்டனை தருவது கிறிஸ்துவின் நோக்கமல்ல. ஆனால் வீழ்ந்துகிடக்கும் உலகத்திற்கு மீட்பையும், அன்பையும் வெளிப்படுத்தும் வண்ணமாகவே அவர் வெளிப்பட்டார். அழைக்கப்பட்ட உயரிய அழைப்பை ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் உணரவேண்டும்.ஒரு தேவபிள்ளையின் கடமையைக் குறித்து வேதம் சொல்கிறது. நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள் (1 பேது 2 : 13).தேவகட்டளையோடு ஒப்பிடும் போது மாற்றங்கள் இருந்தாலும் கூட தேவனால் நியமிக்கப்பட்ட அரசாங்க சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிய வேண்டியது அவசியம்.மேலும் நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும் (1 தீமோ 2: 1-3).நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி. தன்னை சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான் (2 தீமோ 2 : 3-4).

கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார் (1 பேது 2 : 21-24). தீமைக்குத் தீமையை சரிக்கட்டாதிருங்கள் (1 பேது 3 : 9). உங்களைத் துன்பப்படுத்து கிறவர்களை ஆசீர்வதியுங்கள்.ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு (ரோமர் 12 : 14-21).

சமாதானத்திற்கு அடையாளமாகவே பரிசுத்தவான்களுடைய வாழ்வானது உலக சேவையை மறுத்து, உறுதியாய் போதித்து வந்ததினின்று தெரிகிறது. எதிர்ப்புகள் வேண்டாம் என்கிற போதனையானது உலகமெங்கும் பல எதிர்ப்புகளை சந்தித்தும், பாடுகளுக்குள் ஒப்புவிக்கப்பட்டும், மரணத்தைக் கூட சந்தித்துள்ளது.ஆனால் குறுகலான இந்த பாதையே நித்திய ஜீவனுக்கு வழிவகுக்கும்.

# கேள்விக்கு என்ன பதில்?

## சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதைச் சார்ந்து எவ்வாறு ஒரு கிறிஸ்தவன் ஆதரவாக நடந்துகொள்ள வேண்டும்?

சட்டதிட்டங்கள் யாவையும் பாசாங்கற்றவிதமாய் ஏற்றுக்கொள்வதும், நாம் அவற்றில் நம்மை உட்படுத்திக் கொள்ளாவிடினும், போர் சூழ்நிலை ஏற்பட்டால் அதனால் ஒருவருடைய வாழ்வில் இழப்பு ஏற்பட்டுவிடாதவாறு நடந்துகொள்வது ஒழுக்கமும், கிரமமுமானது.அந்தந்த இடத்திற்குரிய மற்றும் தேசிய அளவில் சமாதானத்திற்கும் அமைதிக்குமான பணியாளர்கள் இல்லாவிடில் சிறிதளவில் சுதந்தரமும் மேலும் குழப்பங்களும் கூட ஏற்படும்.நாம் செய்கின்ற செயலை சுதந்தரமாக நம்மால் செய்யமுடிகிறது எனில் அதற்கு பிண்ணனியில் அனுதினமும் தங்களை பணயம் வைத்து நம்மை பாதுகாக்கும் அநேகர் தியாகத்தோடு நின்று சேவை செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஆவிக்குரிய ஒருமைப்பாடும், ஆதரவும், நல்லிணக்கமும் நம் தேசப் பாதுகாவலர்களுக்கு நம்முடைய ஜெபமும் ஏறெடுக்கப்பட வேண்டும்.குறிப்பாக, கிறிஸ்தவர்களாயினும் நாம் இருவேறு நாட்டின் குடிமக்கள் என்பதை மறந்துபோய் விடக்கூடாது. அதில் ஆவிக்குரிய நல்லொழுக்கமே நம் தலையாய கடமை.ஆனால் அது மற்றொன்றிற்கு தடையல்ல.

தேவனுடைய கிருபையால் வாழ்கிற நம்மை தவிர வாழ்ந்து கொண்டிருக்கும் அநேகம் ஜனங்களுக்கு மிகவும் பிரயோஜனமான சட்டங்களை அரசாங்கம் செயல்படுத்தும் போது, கிறிஸ்தவர்களாகிய நாம் அவைகளால் கவர்ந்திழுக்கப்படும்போது ஒருவேளை இவ்வுலகத்தின் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களுக்கும், நம் குழந்தைகளின் எதிர்கால தேவைக்கும் பயனுள்ளதாக இருக்கலாம்.

## ஒரு கிறிஸ்தவர் தற்காப்புக்கான வன்முறைச்செயல்களில் ஈடுபடலாமா?

இந்த கேள்வியானது உணர்வுபூர்வமாக பல பதில்களையும் எதிர்கேள்விகளையும் உண்டாக்கும். ஏனெனில் கிறிஸ்தவர்களாய் இருக்கிற நாம் போர் என்பது பல கோட்பாடுகளை சரியாக உள்ளடக்கியதும், வெளிப்படுத்துவதுமான செயல் என்பதைக் கொண்டும், தீமைக்கு தீமை செய்வது தவறு என்று போதிக்கப்பட்டும் இருப்பதால் கவனமாக செயல்பட வேண்டும்.ஒரே ஒரு நபர் பாதிக்கப்படும்போது தற்காப்புக்காக அதன் நிலைகளில் மேற்கொள்ளப்படலாம். ஆயினும் இயேசுகிறிஸ்துவின் வாழ்வை எடுத்துக்கொள்வோமானால் அவர் அடிக்கப்படும் போதும், சிலுவையிலறையப்படும்போதும் கூட தற்காப்புக் கென்று எதையும் செய்ய துணியவில்லை. அப்போஸ்தலர்களும் இரத்தசாட்சியாய் மரித்த ஆயிரக்கணக்கான தேவதாசர்களும் கூட தங்களைக் காத்துக்கொள்ளும்படியாக, பதிலடி யாரையும் அடிக்க வில்லை. பழிவாங்கவில்லை.அநீதி இழைக்கப்பட்டு, கோதுமை மணியாய் மண்ணில் புதைந்து போனவர்கள் எத்தனையோபேர், ஒருவர் தனிப்பட்ட முறையில் பயமுறுத்தப்படும்போது, எதிர்க்ககூடாது என்பது பொருந்தாததாயிருப்பினும் தேவபெலனும், கிருபையும் பரலோகத்திலிருந்து நமக்காய் செயல்படும்.அதன் வல்லமையினாலே அன்பும், மன்னிக்கும் குணாதிசயமும் நமக்குள் வெளிப்படும்.

இயேசுகிறிஸ்துவின் நாட்களில் ஒரு ஜனக்கூட்டம் இயேசுவை பிடித்துக் கொலை செய்யும்படியாக தீர்மானித்து சுற்றித் திரிந்தனர்.இரண்டு இடங்களில் இயேசு அவர்களிடமிருந்து விலகி, அவர்களுடைய கண்களுக்கு மறைந்துபோனார்.ஆகையால் தற்காப்புக்கு தப்பித்துக்கொள்வது சிறந்தது.பல நிகழ்வுகள் இதற்கு எதிர்மறையாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.நான் என்னுடைய பிள்ளைகளுக்கு வலியுறுத்தி சொல்வதில் தற்காப்புக் கென்று பணிசெய்வதை ஏற்புடையதாக கருதுவதில்லை. ஏனெனில் கர்த்தரும் நம்மால் தாங்கிக்கொள்ளக்கூடிய அளவுக்கு பாரத்தைதான் நம்மேல் அனுமதிப்பார். கடினமான சூழ்நிலைகளிலும் கூட அந்த அளவுக்கு அவருடைய கிருபை நம்மேல் இருக்கும்.தேவஞானமும், பெலமும் கிரியை செய்யும்.

# நேர்மையான ஆட்சேபணை

**மனுஷனைக் காட்டிலும் தேவனுக்கு கீழ்ப்படிவதே நலம்.**



நேர்மையான ஆட்சேபனை செய்யும் ஒருவர் மத அடிப்படையிலான தார்மீக அமைப்புகளின் ஆயுதம் சம்மந்தமான பொறுப்புகளை ஏற்க மறுப்பவர்கள். வரலாற்றிலே இவ்வாறு நடந்தவர்கள் சிறையிலடைக்கப்பட்டும், முறையிடப்பட்டனர்.

சில எதிர்ப்பாளர்கள் போரல்லாத சேவையை ஏற்றுக் கொள்பவர்கள்.சிலர் மாத்திரம் போர் சேவையை எப்போதும் எதிர்க்கிறவர்கள்.நவீனமயமான இந்த நாட்களில் சில நாடுகள் நேர்மையான ஆட்சேபணைக்காரர்களுக்கு மத அடிப்படையில் அனுமதி வழங்கியிருக்கிறது.

அதிலும் குறிப்பாக சில நாடுகள் அதற்கு மாற்றாக, இணக்கமான சேவைகளில் பணியமர்த்தப்படும்படியாக உத்தரவிடப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு நாட்டின் குடிமக்களாக அந்நாட்டின் சட்டதிட்டங்களுக்கான நெறி முறைகளில் நடக்க கடமைப்பட்டுள்ளோம். ஆயினும் நேரடியாக ஆவிக்குரிய ஒழுங்குமுறைகளுக்கு மாறாக இருப்பின், மனத்தாழ்மையோடும், பயத்தோடும் மனுஷனுக்கல்ல கர்த்தருக்கே கீழ்ப்படியக் கடவோம்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section

**TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY**

உங்களுக்குத் தெரியுமா?

*கொலை செய்யாதிருப்பாயாக – யாத் 20 : 13*

சில மொழிபெயர்ப்பில் கொல்லு என்கிற வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் கொலை என்பது இந்த வசன மொழிபெயர்ப்பில் காணமுடிகிறது. கொலை என்பது சட்டத்திற்கு எதிரான ஆக்கினைக்கான ஒரு செயல்

இந்த கற்பனை கொடுக்கப்பட்டபின்பு, தேவனாகிய கர்த்தர் லேவியர்களை நோக்கி விக்கிரக ஆராதனை செய்யும் ஜனங்களை எழும்பி கொலை செய்யும்படியாக உங்களுடைய பட்டயத்தை கருக்காக்குங்கள என்கிறார்.

மோசேக்கு கர்த்தர் கொடுத்த நியாயப்பிரமாணத்திற்கு மாறாக அல்ல, நியாயத்தீர்ப்பிலே செய்யப்படும் காரியத்தை அவர் நீதியாய் செய்கிறார்.

வேதத்திலே மனுக்குலத்தின் வாழ்விற்கு மதிப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த ஒரு கற்பனைமாத்திரம் புதிய ஏற்பாட்டின் அடித்தளம் அல்ல.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

# உலகத்துக்கு வேடிக்கையானோம்

எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலராகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள் போலக் கடைசியானவர்களாய் காணப்படப் பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம். நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர்.1கொரி 4 : 9 – 13.

CONTACT :-

**The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.**

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

அப்போஸ்தலர்களின் பாடுகளையும், துன்பங்களையும் குறித்து பவுல் அப்போஸ்தலன் 1 கொரி 4 : 9 – 13 ல் கூறியிருக்கிறார். அர்பணிப்புள்ள ஒவ்வொரு தேவ ஊழியர்களுக்கும் இது உற்சாகமாகவும் சவாலாகவும் விளங்குகிறது.



ரோம போர் வீரர்களை ஆயுதங்களோடு கொண்டுவந்து அரைவட்டபள்ளமான இடத்திலே காட்டு மிருகங்களோடு சண்டையிடும்படியாக கீழே இறக்கி விடப்படும் ரோமர்களின் வழக்கத்தை பவுல் மறைமுகமாக குறிப்பிடுகிறார். அப்படி சண்டையிடுகையில் ரோம போர்வீரர் உயிரோடு இருந்தால், ஆயுதங்களற்றவர்களாக்கி அவர்களை மிருகங்களோடும், மனிதர்களோடும் சண்டை பண்ணப்பட்டு கொல்லப்படுவார்கள்.

அப்படியும் தப்பித்துவிட்டால், வேறொரு எதிரியானவனிடத்தில் விடப்பட்டு நிச்சயமான மரணத்தை தண்டனையாக ஏற்பான். பவுலைப் போல பாடுகளோடும், நெருக்கங்களோடும் தவறான குற்றச்சாட்டுகளோடும், வறுமையிலும், சுகவீனத்திலும் வாழ்க்கையில் போராடும் அநேக சுவிசேஷகர்களை நாம் அறிவோம். ஆனால் கிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் நொறுக்கப்படும் போது, நிச்சயமான அதற்கான பலன் பரலோகத்தின் மேன்மை நமக்கு உண்டு.

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் உலகத்தார் மத்தியில் வேடிக்கையானவர்களாகவே தெரிகிறோம். வேடிக்கை என்பது போராளிகள் சண்டையிடும் அரைவட்ட பள்ளமான இடத்திலே பார்க்கும்படியாய் நிற்கிற கூட்டத்தை குறிக்கிறது. அதைச் சுற்றியுள்ள எல்லா இருக்கைகளிலும் வேடிக்கை பார்க்கும்படியாய் அமர்ந்திருப்பவர்கள் போர்வீரர்களின் கொடூர மரணத்தையும், அல்லது குற்றவாளிகளின் தண்டணையான மரணத்தையும் பார்க்கிறார்கள். தேவனுடைய பரிசுத்த மனுஷர்களும் இப்போது இந்த உலகத்தால் சூழப்பட்டு நின்றுகொண்டு, அநீதியான பாவமனுஷர்களின் கையில் வேடிக்கைப் பொருளாக பாவிக்கப்படுகிறார்கள். தேவனுடைய தாசர்களின் ஆத்துமாவும், இருதய சிந்தனையும், உலகமனுஷரோடு ஒப்பிடும்போது மிகவும் கனத்திற்குரியது. உலகம் ஒருநாளும் தேவபிள்ளைகளை புரிந்துகொள்ளாத காரணத்தினால்தான் ஒதுக்கிவைக்கிறது. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் உலகத்தினின்று வேறுபட்டவர்கள் அவர்களிடத்திலே அன்பும், மன்னிக்கும் குணாதிசயமும் இருப்பதால் பதிலுக்கு பதில் செய்வதோ, சண்டையிடும் முறையிடுதல்களே இல்லை. அவர்கள் மனத்தாழ்மையையும் அன்பையும், ஒற்றுமையையும் போதிக்கிறார்களே அல்லாமல் சிற்றின்பமும், மாயையுமான உலகத்திற்கான எண்ணங்களைக் குறித்து போதிப்பதில்லை. அதனால் தான் அவர்கள் வேடிக்கைப் பொருளாக எண்ணப்படுகிறார்கள்.

**THE CHURCH OF GOD Worship Place: Preshitha Bhavan, Seelakkampatti Road, Kedimedu, Kolarpatti - 642 107**

**தேவசபை ஆராதனை நடைபெறும் இடம் : பிரசீதா பவன், சீலக்காம்பட்டி ரோடு, கெடிமேடு, கோலார்பட்டி - 642 107**

**SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த ஆலயத்திற்கும் செல்லாமல் இருப்பவர்கள் எங்களுடன் பரிசுத்தஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

**Come & Worship with us on Real Truth   Phone (போன்) : 9597562641**

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316